

# ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

## ஸ்ரீ ஆச்சார்யாளின் அம்ருத உபதேசங்கள்

மனிதனுக்கு வாழ்க்கையில் முன்னேற தன் பரிச்ரமும், ஈஸ்வரனின் கிருபையும் தேவை, தன் கடமையை நன்றாகச் செய்து, ஈஸ்வரனின் க்ருபையையும் வேண்டிக் கொண்டால் சரியான முறையில் கார்யம் செய்ததாக ஆகும். சிலர் தன் கடமையைச் செய்யமாட்டார்கள். ஆனால் ஆசையை மட்டும் வளர்த்துக்கொண்டு ஈஸ்வரனின் க்ருபைக்கு பிரார்த்தனை செய்வார்கள். பரிணாமம் (பலன்) விபரீதமானால் ஈஸ்வரன் மீது பழியைப் போடுவார்கள். இது சரியில்லை. இன்னும் சிலர் விதிமேல் பழியைப் போடுவார்கள். இதுவும் சரியாகாது. முதலில் தன் கடமை எதுவென்று புரித்து கொண்டு, அந்தக் கடமையை (நல்ல) ஸத்கார்யமாக நினைத்து, அதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்து கர்மத்தைச் செய்ய வேண்டும். கார்யத்தை ஆரம்பம் செய்வதற்கு முன்பும், கார்யத்தை முடித்ததற்குப் பின்பும் கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டும். இதுதான் சரியான வழி சிலர் ஈஸ்வரன் கிருபை எனக்கு வேண்டாம். நானே வேலைகளையெல்லாம் சாமார்த்தியமாக முடித்து விடுவேன் என்று நினைப்பார்கள். அந்த எண்ணமே வரக்கூடாது.



கார்ய ஸித்திக்குத் தன் பரிச்ரமும் (முயற்சி)கடவுளின் அருளும் இரண்டும் தேவையானது; ஓடும் வண்டியின் இரண்டு சக்கரங்கள் போல். காட்டில் தூங்கிக்கொண்டு இருக்கும் சிங்கத்திற்கும். கூட அதன் உணவு வேட்டை முதலில் பரிச்ரமம் இல்லாமல் கிடைப்பதில்லை. இதை நன்றாக புரிந்து கொண்டு, தன் பரிச்ரமத்தில் ஒரு குறையும் வைக்காமல், ஈஸ்வரன் கிருபைக்கு ப்ரார்த்தனை செய்தால், அந்த நம்பிக்கை கார்யஸித்தி ஆகிவிடும்.

उद्यमेनैव सिध्यन्ति कार्याणि न मनोरथैः ।  
न हि सुप्तस्य सिंहस्य प्रविशन्ति मुखे मृगाः ॥  
உத்³யமேனைவ ஸித்⁴யந்தி கார்யாணி ந மனோரதை²: |  
ந ஹி ஸுப்தஸ்ய ஸிம்’ஹஸ்ய ப்ரவிஶந்தி முகே² ம்ரு’கா³: ||

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாசந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

Oct 2022



# ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

**காணாபத்யம்**

பொதுவாக கௌரியால் உருவாக்கப்பட்ட சிறுவனின் தலையை சிவபெருமான் துண்டித்து, யானை முகம் பொருத்தியதாக கதைகள் கூறப்பட்டாலும், லிங்க புராணம் சிவனும், உமையும் யானைகளாக உருவெடுத்து விநாயகரைப் பெற்றெடுத்தனர் என்று கூறுகிறது. முத்கல புராணமோ, கௌரி நோன்பிருந்து தவம் செய்து வரம் பெற்று விநாயகனை மகனாகப் பெற்ற சரிதத்தைக் கூறுகிறது.

விநாயக புராணமான இதன் அடிப்படையில் அவர் க்ருத, திரேதா, துவாபர, கலி ஆகிய நான்கு யுகங்களிலும் நான்கு அவதாரங்களில் அவதரித்ததாக கூறுகின்றது.

விநாயகரை முழு முதற் கடவுளாக வழிபடும் சமயம் காணாபத்யம். ஆனால் இந்து மதம் முழுவதற்கும் பொதுவாய் எழுந்தருளியிருக்கும்



தெய்வம் விநாயகர்.

எந்த ஒரு நற்காரியத்தைத் தொடங்கும் முன்னும் விநாயகர் வணக்கத்துடன் தொடங்கும் போது காரியம் சித்தியடையும் என்பது நம்பிக்கை. அத்துடன் விநாயகர் வழிபாட்டில் விநாயகரை உருவத்தில் கொண்டு வருவதும் எளிது. மண்ணினால், சாணத்தினால், அரிசி மாவினால் அல்லது மஞ்சளினால் பிள்ளையரை எளிதில் உருவாக்கிடலாம். வேறு சின்னம் ஒன்றும் அகப்படாத இடத்தில் அறுகம்புல் அவருக்கு அறிகுறியாக வந்து நிற்கும்.



உடலின் அளவிற்கும் ஆன்மாக்களின் அளவிற்கும் தொடர்பில்லை என்பதை உணர்த்த சிறிய உருவமான எலி, அவரின் வாகனமாகிறது. அத்துடன் விநாயகரின் உருவமானது பல்வேறு தத்துவங்களை நமக்குப் புகட்டுகிறது. விநாயகர் 'ஓம்'கார மூர்த்தியானவர் என்பதை விளக்க ஆனைமுகத்தானாக அவர் உருவெடுத்துள்ளார்.

அண்டங்கள் யாவும் அவனிடத்து அடங்கியுள்ளன என்பதை விளக்க அவரது பேழை வயிறும், தன்னிடத்து தங்கியிருக்கும் யாவையும் தனது சக்தியால் தாங்கிக்கொண்டிருக்கிறான் என்பதை வயிற்றைச் சுற்றியிருக்கும் சர்ப்பமும் உணர்த்துகிறது. மானுடரை விட ஆற்றல் மிக்கவர் என்பதைக் காட்ட தும்பிக்கையுட்பட்ட ஐந்து கைகளைக் கொண்டுள்ளார்.

மக்களை நல்வழியில் நடத்துதலை உணர்த்த அங்குசமும், துன்பத்திலிருந்து காக்க பாசமும், சிந்தனாசக்தி வளர்ப்பது அவசியம் என்பதைக் காட்ட ஜபமாலையும், கல்வியை உணர்த்த தந்தமும், அவரது கைகளில் இருக்கின்றன.

மேலும் தும்பிக்கை எப்பக்கம் வளைந்து உள்ளதோ அதன்படி வலம்புரி விநாயகர், இடம்புரி விநாயகர் என இயம்ப்படுகிறார்.

தியாகத்தின் உயர்வைக் காட்ட தனது தந்தங்களில் ஒன்றை இழந்து ஏகதந்து எனப் பெயர் பெறுகிறார். விநாயகருக்கு இன்னும் பல பெயர்கள் அடியார்களால் வழங்கப்படுகின்றன.

விநாயகர் பெரும்பாலும் பிரம்மச்சாரியாக அரசமரத்தடியில் வீற்றிருப்பவராகத்தான் வழிபடப்படுகிறார். ஆனால் புராணங்களின் படி விநாயகருக்கு ஸித்தி, புத்தி, வல்லபை ஆகிய தேவியரும் உண்டு.

விநாயக அவதாரங்களில் முக்கியமானவை 12 ஆகும். அவற்றில், "வக்ரதுண்ட கணபதி" சித்தி புத்தியை மணந்தவர். மும்மூர்த்திகளைப் படைத்தவர். சதுர்த்தி விரதத்தைமும் மூர்த்திகளுக்குப் உபதேசித்து, சக்தி கொடுத்தவர். சிந்தாமணியைக் கவர்ந்த கணன் எனும் அரக்கனை அழித்து சிந்தாமணியை மீட்டதால் "சிந்தாமணி கணபதி" எனவும், கஜமுகாசுரனைக் கொன்றதால் "கஜானன கணபதி" எனவும், விக்னங்கள் எனப்படும் கஷ்டங்களை நீக்கியதால் "விக்ன விநாயகர்" எனவும் பெயர் பெற்றார்.

சிந்து எனும் அரக்கன் மயில் வடிவில் வந்தபோது அவனை அடக்கி வாகனமாகக் கொண்டதால் "மயூரேசன்" எனப் பெயர் கொண்டார்.

(தொடரும்......)



# தேவி வழிபாடு




தேவி, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரையும் படைத்தாள். தன்னுடைய ஸத்வ, ரஜஸ், தமஸ் அம்சங்களை பிரதிபலிக்கும் வகையில் சரஸ்வதி, லஷ்மி, பார்வதி ஆகிய மூவரையும் படைத்தார். இந்த மூவரையும் மூன்று கடவுளர்கட்கும் அவரவர் படைப்பு முதலான தொழிலினை செம்மையாய் செய்ய அனுசரணையாக இருப்பதற்கென திருமணம் செய்து வைத்தார்.

படைப்புத் தொழில் செய்பவரான பிரம்மாவிற்கு சரஸ்வதியையும், காக்கும் கடவுளான விஷ்ணுவிற்கு லக்ஷ்மியையும், அழிக்கும் கடவுளாகிய சிவனுக்கு பார்வதியையும் மணம் முடித்து வைத்தார்.

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம், பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாசந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், பேலூரில் பிப் 26, 2012 விஜய யாத்திரையின் போது ஸ்ரீ சாரதாம்பாளுக்கு கும்பாவிஷேகம் செய்த போது எடுத்த படம்)

சைவம் வைஷ்ணவம் இவை இரண்டும் பெருவாரியான மக்களால் பாரத தேசம் முழுவதும் பின்பற்றப்பட்டு வந்தாலும் வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு என்ற பேதங்கள் இல்லாமல் எல்லா சமயப் பிரிவு மக்களும் சக்தி வழிபாட்டை ஏற்றுக்கொண்டார்கள் என்று தான் கூறவேண்டும்.

சைவத்திற்கும் வைணவத்திற்கும் குடுமிபிடி சண்டை வரலாற்று காலத்தில் நடந்தது என்றாலும் கூட, சக்தியை திருமாலின் தங்கையாகவும் சிவனாரின் துணைவியாகவும் இரு பிரிவினர்களுமே ஏற்று வழிபட்டார்கள்.

கணபதியை வணங்குபவர்கள், கந்தனை வணங்குபவர்கள் அன்னை சக்தியை புறக்கணித்து விடவே முடியாது. காரணம் கணபதி, கந்தன் இரண்டு பேருக்குமே அன்னை அபிராமி தான் பெற்றெடுத்த தாய். எனவே தாயை புறக்கணித்து விட்டு தனயன்களை வழிபட யாரும் துணிய மாட்டார்கள்.

கண்ணுக்கு நேரே தெரிகின்ற கடவுளாகிய சூரிய பகவான் கூட, சக்தி தேவியின் நெற்றியில் ஜொலிக்கும் திலகமாகி விடுவதால் சௌரம் என்ற சூரிய வழிபாடும் சக்தி வழிபாட்டிற்கு முன்னால் அடங்கி விடுகிறது.

(தொடரும்......)



# நவராத்திரி

வீட்டில் பத்து நாட்கள் கொண்டாடப்படும் விழாவாக நவராத்திரி தவிர, வேறு விரத விழா இல்லை. வீட்டில் கொண்டாடப்படும் இந்த விழா வீடு என்ற கோயிலுக்கு ஒரு 'பிரம்மோற்சவம்' என்று கூட சொல்லலாம்.



நவராத்திரி சமயத்தில் வீட்டில் "கொலு" என்னும் அமைப்பில், மூன்று, ஒன்பது அல்லது பனிரெண்டு படிகள் அமைத்து, அதில் பல்வேறு வகையான பொம்மைகளை அமைத்து, அம்பிகையை வைத்து, வழிபாட்டுடன், ஆடலும் பாடலுமாக வீடே சொர்க்க லோகம் போல காட்சியளிக்கும். நவராத்திரி வழிபாடு பெண்களுக்கே உரியது. எல்லா வயதுடைய, பருவத்தைச் சார்ந்த பெண்கள், நவராத்திரி வழிபாட்டில் ஈடுபடலாம்.

**நவராத்திரிகள் கொண்டாடப்படும் காலங்கள் :**

-சித்திரை மாதத்தில் வரும் ஒன்பது இரவுகள் வசந்த நவராத்திரி.
-ஆடி மாதத்தில் வரும் ஒன்பது இரவுகள் ஆஷாடநவராத்திரி
-புரட்டாசி மாதத்தில் வரும் ஒன்பது இரவுகள் சாரதா நவராத்திரி.
-தை மாதத்தில் கொண்டாடப்படும் நவராத்திரி சியாமளா நவராத்திரியாகும்.

**புரட்டாசி மாத நவராத்திரி வழிபாடு :**

புரட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரியையே அனைவரும் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்கள். புரட்டாசி மாதத்தினை சரத்காலம் என்று கூறுவர். இந்த சரத்காலத்தில் வரும் நவராத்திரியை சாரதா நவராத்திரி என்று சிறப்பாக கொண்டாடுவார்கள். இந்த ஒன்பது நாட்களுடன் ஒரு நாளைக் கூடுதலாகச் சேர்த்து தசராவாகவும் கொண்டாடப்படுகிறது. தசம் என்றால் பத்து அத்துடன் ஒரு இரவைச் சேர்த்து (தச+ரா) பத்துநாள் திருவிழாவாக கொண்டாடுகிறார்கள். மைசூரிலுள்ள சாமுண்டேஸ்வரி அம்பிகைக்கு சிறப்பாக விழா கொண்டாடப்படுகிறது. சரத் காலத்தின் முக்கிய மாதமாகிய புரட்டாசி மாதத்தின் வளர் பிறையில் பிரதமை திதியில் ஆரம்பித்து ஒன்பது திதியுடன் பத்தாவது திதியான தசமி திதியுடன் நிறைவுபெறுகிறது நவராத்திரி விழா. (தொடரும்.....)



# தசமஹா வித்யா

இந்த தச மஹா வித்யா தோற்றம் மிகவும் பழமையானதாகும். மஹா விஷ்ணு தசாவதாரம் எடுத்த போது தசாவதார காரியங்கள் நிறைவேற




உதவியர்கள் தச மஹா வித்யைகளே.

காளி - கிருஷ்ண அவதாரம்
தாரா - ராம அவதாரம்
ஷோடசீ - கல்கி அவதாரம்
புவனேஸ்வரி - வராஹ அவதாரம்
திரிபுரபைரவி - நரஸிம்ம அவதாரம்
சின்னமஸ்தா - பரசுராம அவதாரம்
தூமாவதி - வாமன அவதாரம்
பகளாமுகி - கூர்ம அவதாரம்
மாதங்கி - பலராம அவதாரம்
கமலா – மச்ச அவதாரம்



என்று அந்தந்த அவதாரங்களுக்கு உரிய சக்தியை வழங்கியவர் தச மஹா தேவியர்களாவர் என்று முண்டமாலா தந்திரம் கூறுகிறது.

இவர்களில் காளி, புவனேஸ்வரி, ஷோடசீ, கமலா, மாதங்கி ஆகியோர் வழிபாடு மட்டுமே இன்றளவும் பெருமளவில் பின்பற்றப்படுகிறது.

தாரா தேவி வழிபாடு புத்தமதத்தினரிடையே அதிகமாக உள்ளது.

தூமாவதி, சின்னமஸ்தா, பகளாமுகி, பைரவி ஆகியோர் வழிபாட்டு முறைகள் மிகவும் கடினமானபடியால், இப்போது அதிகம் வழக்கத்தில் இல்லை.

உண்மையான பக்தியுடன் தச மஹா வித்யா தேவியரை வழிபடும் சாதகர்கள், உயர்ந்த ஞானத்தையும், தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அடைவர்

**1. காலமெல்லாம் காளி...**

காலம் என்கிற விந்தைத் தத்துவத்தின் தெய்வ வடிவமே காளி.

காலம் என்றால் கருநிறம் என்று ஆகும். இவள் கரு நிறத்தவள். காலத்தின் மாற்றத்தை இவள் செய்துவருகின்றாள். இறப்புக்கு ரூபமாக இருக்கிறாள் காளி. உலகையே மகா மயானமாக்கி, மயான ருத்திரனார் மீதே நின்றாடுகிறாள் காளி, கோரமும் இறைவன் செயல் என்று தெளிந்து, அழகைப் போலவே கோரத்தையும் ஏற்கும் பொருட்டுப் பயங்கரத்தை உருவகித்துக் காட்டுகிறாள்.

காளியன்னை கூரிய நகங்களும், கொடூர ஏளனமான நகையும், தொங்கும் நாவு கொண்டு நிர்வாணமாயிருப்பாள். அல்லது சவங்களைப் பின்னிய ஆடை, முண்டமான கபாலரத்ன தலையணி இவற்றை அணிந்திருப்பாள்.

கரத்தில் கத்தியும், கத்தியால் வெட்டிய தலையையும் பிடித்திருப்பாள். ஆயினும் மற்ற இரு கரங்கள் அபயமும் வரதமுமாக இருக்கக் காண்கிறோம்.

பலன்கள்: இக்காளியை தரிசித்தால் மனதில் அமோகமான தைர்யமும், வாக்கில் நல்ல வல்லமையும், முன்கூட்டறியும் தன்மையும், நிகரற்ற செல்வமும், நோய் நொடியற்ற நீண்ட வாழ்வும் சாஸ்திர ஞானமும், அதனால் முக்தியும் கிடைக்கும்.

**2. தடைகளை தகர்க்கும் தாரா**

பத்து விதமான வித்யா தேவதைகளில் ஒருத்தியான தாராவிலேயே ஐந்து வகையர் உண்டு.






அவர்கள் நீலசரஸ்வதி, உக்ரதாரா, சுக்லதாரா, நீலதாரா, சித்ரதாரா என்போர்.

உண்மை நிலை: உணர்வுகள் நசிக்கிற பேருணர்வு வடிவினள் என்பதை உணர்த்தவே இவள் ஒரு காலால் சவத்தை மிதித்துக் கொண்டிருக்கிறாள். வாழ்க்கை முடிச்சை வெட்டுவதற்காகக் கத்திரிக்கோலும், அகங்கார நீக்கத்தைக் காட்ட மண்டை ஓடும் வைத்துள்ள இவளது இன்னொரு கரத்தில் ஞான வாளும், இந்த பயங்கரங்களுக்கு ஈடு செய்வதைப்போல எஞ்சிய கரத்தில் ஆன்ம மலர்ச்சியைக் காட்டும் குளிர் நீலத்தாமரையும் தரித்திருக்கிறாள்.

மூவுலகையும் அறியாமையையும் கபாலத்தில் வாங்கிக்கொண்டு ஒரு நொடியில் அழித்து விடுவாளாம்.

**பலன்கள்:** போக, மோக்ஷங்கள் இரண்டையும் இத்தேவியை தரிசித்தால் அடையலாம்.

முக்கியமாக வாக்ஸித்தி, கவிதாலாபம், ராஜ ஸன்மானம், செல்வம், பதவி இவைகளை சுலபமாக அடைய வழியாகும். கடைசியில் வேதாந்த வாக்ய ஞானத்தினால் மோக்ஷமும் பெறலாம். அக்ஞானத்தை அகற்றித் தன் கையிலுள்ள கபாலத்தில் போட்டு பொசுக்கி மூவுலகத்தை காப்பாற்றும் ஸ்வரூபமல்லவா தேவியின் வடிவம்.
(தொடரும்…)



## ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

### 1.ஸ்ரீ குருநாதர் மஹிமை

இவ்விதம் ஊருக்கு திரும்பி வந்த ஸமயத்தில் தன் 21 வது வயதில் இப் பெரிய பீடாதிபத்யமும் கிடைத்து தன் குருவும் ஸித்தியடைந்து விட்டபடியால், பீடத்திற்குரிய ஸம்பிரதாயங்களை நன்கு தெரிந்துகொள்வதற்கு ஸந்தர்ப்பமில்லை. அப்படியிருந்தும். எல்லாவற்றையும் விவரம் தெரிந்தவர்களிடமிருந்து அதி விரைவில் கிரஹித்துக் கொண்டார்கள். நல்ல பண்டிதர்களை வரவழைத்து. அவர்களுக்கு வேண்டிய ஸௌகரியங்களை செய்து கொடுத்து, அவர்கள் மூலம் சாஸ்திர ஞானத்தையும் விருத்தி செய்து கொண்டார்கள். சாஸ்திர ஞானம் மாத்திரம் இருந்தால் போதாதென்று, அதை அனுபவத்திற்குக் கொண்டுவரக் கருதி விசேஷமாக யோகாப்யாஸமும் தபஸும் செய்து அவற்றில் ஸித்தி பெற்றார்கள். அப்படியே அவர்களுடைய மந்திர ஸித்தியும் எல்லையற்றதாயிருந்தது. தன் 40 வது வயதிலிருந்து காய் கிழங்குகளை மாத்திரம் ஆஹாரமாக வைத்துக் கொண்டார்கள். காலக் கிரமத்தில் (பாசுல்/காயை மட்டும் உபயோகித்து வந்தபடியால் அவர்களுக்கு பாகற்காய் ஸ்வாமிகள் என்று பிரஸித்தி ஏற்பட்டு விட்டது. ஆஹாரத்தைப் போல் நித்திரையையும் ஜயித்தார்கள்.



(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம், 32ஆவது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ நரசிம்ஹ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

பிரதி தினமும் இருபது மணி நேரம் மந்திர ஜபம், தேவதாராதனை, தியான நிஷ்டை, இவைகளிலேயே ஈடுபட்டிருப்பது ஸஹஜமாய் விட்டது. ஸ்வாமிகள் நித்திரை செய்ததை யாரும் பார்த்ததில்லை. ராத்திரிகளில் பூஜா திரவியங்கள் எல்லாவற்றையும் ஸித்தப்படுத்தினவுடன் சிப்பந்திகளின்



அசக்தியை உத்தேசித்து அவர்களை அனுப்பிவிட்டு ஸ்வாமிகள் ஏகாந்தமாய் இருந்து கொண்டு ஸாவகாசமாய் பூஜாதிகளை நடத்துவார். இவர் பெங்களூருக்கு விஜயம் செய்திருந்த ஸமயம் அப்பொழுது மைஸூர் ஸம்ஸ்தானம் கமிஷனராக விருந்த பௌரிங் என்ற ஐரோப்பியர் இவருடைய மஹிமையைக் கேள்வியுற்று ஒரு நாள் நள்ளிரவில் முன் தகவலன்னியில் இவர் இருக்கும் இடம் வந்து பார்க்கையில், ஸ்ரீ ஸ்வாமிகள் அந்த நடு நிசியிலும், வெகு உத்ஸாஹத்துடன் ஸ்ரீ சந்திரமௌலீசுவர பூஜையில் ஈடுபட்டிருந்ததைக் கண்டு வியந்து உள்ளம் கனிந்து உருகினார். அவர் எழுதியிருக்கும் பல கடிதங்களிலிருந்து அவருக்கு ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஏற்பட்ட கௌரவ புத்தியும் பக்தியும் நன்கு விளங்குகின்றன.

இவர்கள் ஸஞ்சார காலத்தில் ஒரு கிராமத்திற்கு விஜயம் செய்வதாய் ஸ்ரீமுகம் அனுப்பப்பட்டது. அந்த கிராமத்தில் தனிகர் ஒருவர் புதிதாக வீடு கட்டி கிரஹப்பிரவேசம் செய்யும் காலத்திலேயே ஒரு பிரஹ்மராக்ஷஸ்ஸும் பிரவேசம் செய்து கொண்டதாக அநேக காரணங்களால் நிச்சயித்து, அதன் உபத்திரவம் தாங்க முடியாமல் அவர் வேறு கிராமத்திற்குப் போய்க் குடியிருந்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் மூலமாக இந்த தொந்திரவை நிவிருத்தி செய்து கொள்ள உத்தேசம். ஆனால் ஸ்ரீமடம் அதிகாரிகளிடம் சொன்னால் ஸம்மதிக்க மாட்டார்கள் என்று நினைத்து விஷயத்தை மறைத்து ஸ்ரீஸ்வாமிகளுடைய ஜாகைக்காக இவ் வீட்டையே சுத்தப்படுத்திக் கொடுத்தார். ஸ்ரீஸ்வாமிகளுக்காவது அவர்களுடைய ஜனங்களுக்காவது அந்த வீட்டிலுள்ள உபத்திரவ விஷயம் தெரிவதற்கு இடமில்லை. ஸ்ரீஸ்வாமிகள் கிரமப்படி அங்கே வந்து இறங்கி வழக்கம்போல் பரிஜனங்களை அனுப்பிவிட்டு இரவில் ஏகாந்தமாய் பூஜை செய்து கொண்டிருக்கும் போது நடுராத்திரியில் மடத்தைச் சேர்ந்த ஒரு வித்வானுடைய வஸ்திரங்களை அணிந்து, ஸால்வையை தோளில் போட்டுக்கொண்டு தூணில் சாய்ந்து கொண்டிருந்த ஒரு மனித ரூபத்தைக் கண்டார்கள். மடத்து வித்வான் தான் என்று நினைத்து உட்காரும்படி ஜாடை காட்டியும், உட்காராமலிருந்ததிலிருந்து ஸந்தேஹம் கொண்டு உற்றுப்பார்த்ததில் விஷயம் தெரிந்தது. உடனே தன் வலது கையில் கொஞ்சம் தீர்த்தம் எடுத்து நரஸிம்ஹ மந்திரத்தினால் அபிமந்த்ரணம் செய்து அந்த ரூபத்தின் பேரில் புரோக்ஷணம் செய்தார்கள். அது அந்த தேஜஸ்ஸை பொறுக்க முடியாமல் "எரிகிறதே, எரிகிறதே" என்று உரக்க சப்தமிட்டுக் கொண்டு ஓடிப்போய் அவ்வீட்டின் பின்பக்கமுள்ள கிணற்றில் பாய்ந்து விழுந்தது. இந்த சப்தத்தைக் கேட்டு, படுத்திருந்த ஜனங்கள் திகிலடைந்து வந்து பார்க்கையில் யாரையும் காணவில்லை. கிணற்றில் வஸ்திரங்களும் ஸால்வையும் மிதக்கக் கண்டார்கள். இவ்வாச்சர்ய ஸம்பவத்தைப் பற்றி மடத்து ஜனங்கள் பேசிக்கொண்டிருப்பதை காலையில் கேட்ட அந்த வீட்டுக்காரர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் உடனே வந்து நமஸ்கரித்து வாஸ்தவத்தை தெரிவித்தார். அவர்கள் மிகவும் தயையுடன் "இன்று உங்களுக்கு இருந்த தொந்திரவு நீங்கிவிட்டது. இனி பயப்பட வேண்டாம். இது முதல் கவலையன்னியில் இங்கேயே வாஸம் செய்யலாம்" என்று அநுக்ரஹித்தார்கள். (தொடரும்....)



# श्रीमन्नारायणीयम्
## ஶ்ரீமந்நாராயணீயம்
## श्रीगुरुदेवताप्रार्थनम्

पञ्चाशल्लिपिभिर्विभक्तमुखदोः पन्मध्यवक्षस्थलाम् भास्वन्मौलिनिबद्धचन्द्रशकलामापीनतुङ्गस्तनीम् । मुद्रामक्षगुणं सुधाढ्यकलशं विद्यां च हस्ताम्बुजैः बिभ्राणां विशदप्रभां त्रिनयनां वाग्देवतामाश्रये ॥ ८ ॥
பஞ்சாஶல்லிபிபி⁴ர்விப⁴க்தமுக²தோ³: பன்மத்⁴யவக்ஷஸ்த²லாம்
பா⁴ஸ்வன்மௌலிநிப³த்³த⁴சந்த்³ரஶகலாமாபீனதுங்க³ஸ்தனீம் . முத்³ராமக்ஷகு³ணம்'
ஸுதா⁴ட்⁴யகலஶம்' வித்³யாம்' ச ஹஸ்தாம்பு³ஜை:



பி³ப்⁴ராணாம்' விஶத³ப்ரபா⁴ம்' த்ரிநயனாம்'
வாக்³தே³வதாமாஶ்ரயே || 8 ||

शान्तं पद्मासनस्थं शशधरमकुटं पञ्चवक्रं त्रिनेत्रम् शूलं वज्रं च खड्गं परशुमभयदं दक्षभागे वहन्तम् ।
नागं पाशं च घण्टां प्रलयहुतवहं साङ्कुशं वामभागे नानालङ्कारयुक्तं स्फटिकमणिनिभं पार्वतीशं नमामि
॥ ९ ॥
ஶாந்தம்' பத்³மாஸனஸ்த²ம்' ஶஶத⁴ரமகுடம்'
பஞ்சவக்ரம்' த்ரிநேத்ரம் ஶூலம்' வஜ்ரம்' ச
க²ங்க³ம்' பரஶுமப⁴யத³ம்' த³க்ஷபா⁴கே³ வஹந்தம்
.
நாக³ம்' பாஶம்' ச க⁴ண்டாம்' ப்ரலயஹுதவஹம்'
ஸாங்குஶம்' வாமபா⁴கே³ நானாலங்காரயுக்தம்'
ஸ்ப²டிகமணினிப⁴ம்' பார்வதீஶம்' நமாமி || 9 ||

आरोग्यं पद्मबन्धुर्वितरतु नितरां सम्पदं शीतरश्मिः भूलाभं भूमिपुत्रः सकलगुणयुतां वाग्विभूतिं च सौम्यः । सौभाग्यं देवमन्त्री रिपुभयशमनं भार्गवः शौर्यमार्किः दीर्घायुस्सैंहिकेयो विपुलतरयशः केतुराचन्द्रतारम् ॥ १० ॥
ஆரோக்³யம்' பத்³மப³ந்து⁴ர்விதரது நிதராம்' ஸம்பத³ம்' ஶீதரஶ்மி: பூ⁴லாப⁴ம்'
பூ⁴மிபுத்ர: ஸகலகு³ணயுதாம்' வாக்³விபூ⁴திம்' ச ஸௌம்ய: . ஸௌபா⁴க்³யம்'
தே³வமந்த்ரீ ரிபுப⁴யஶமனம்' பா⁴ர்க³வ: ஶௌர்யமார்கி:
தீ³ர்கா⁴யுஸ்ஸைம்'ஹிகேயோ விபுலதரயஶ: கேதுராசந்த்³ரதாரம் ||10 ||


अरिष्टानि प्रणश्यन्तु दुरितानि भयानि च ।
शान्तिरस्तु शुभं मेऽस्तु ग्रहाः कुर्वन्तु मङ्गलम् ॥ ११ ॥
அரிஷ்டானி ப்ரணஶ்யந்து து³ரிதானி ப⁴யானி ச .
ஶாந்திரஸ்து ஶுப⁴ம்' மே(அ)ஸ்து க்³ரஹா: குர்வந்து மங்க³லம் ||11 ||

## बिरुदावलिः

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य-पदवाक्यप्रमाणपारावारपारीण
यमनियमासनप्राणायामप्रत्याहारधारणाध्यानसमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठ–
तपश्चक्रवर्ति–अनाद्यविच्छिन्नश्रीशङ्कराचार्यगुरुपरम्पराप्राप्त



षड्दर्शनस्थापनाचार्य-व्याख्यानसिंहसनाधीश्वर सकलनिगमागमसारहृदय-साङ्ख्यत्रयप्रतिपादक–
वैदिकमार्गप्रवर्तक–सर्वतन्त्रस्वतन्त्र - आदिराजधानी विद्यानगरमहाराजधानी-कर्णाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य
श्रीमद्राजाधिराजगुरु-भूमण्डलाचार्य-ऋष्यशृङ्गपुरवराधीश्वर तुङ्गभद्रातीरवासि-श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक—
श्रीमज्जगद्गुरु–श्रीमदभिनवविद्यातीर्थमहास्वामिगुरुकरकमलसञ्जात श्रीमज्जगद्गुरु श्रीभारतीतीर्थमहास्वामिनां
तत्करकमलसञ्जात–श्रीमज्जगद्गुरु-श्रीविधुशेखरभारतीमहास्वामिनाञ्च चरणारविन्दयोः साष्टाङ्गप्रणामान्
समर्पयामः ॥




## பி³ருதா³வளி:

ஶ்ரீமத்பரமஹம்'ஸபரிவ்ராஜகாசார்யவர்ய-பத³வாக்யப்ரமாணபாராவாரபாரீண
யமநியமாஸனப்ராணாயாமப்ரத்யாஹாரதா⁴ரணாத்⁴யானஸமாத்⁴யஷ்டாங்க³யோ
கா³னுஷ்டா²னநிஷ்ட²–
தபஶ்சக்ரவர்தி–அநாத்³யவிச்சி²ன்னஶ்ரீஶங்கராசார்யகு³ருபரம்பராப்ராப்த
ஷட்³த³ர்ஶனஸ்தா²பனாசார்ய-வ்யாக்²யானஸிம்'ஹஸனாதீ⁴ஶ்வர
ஸகலநிக³மாக³மஸாரஹ்ரு'த³ய-ஸாங்க்²யத்ரயப்ரதிபாத³க–
வைதி³கமார்க³ப்ரவர்தக–ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர - ஆதி³ராஜதா⁴னீ
வித்³யாநக³ரமஹாராஜதா⁴னீ-கர்ணாடகஸிம்'ஹாஸனப்ரதிஷ்டா²பனாசார்ய
ஶ்ரீமத்³ராஜாதி⁴ராஜகு³ரு-பூ⁴மண்ட³லாசார்ய-ரு'ஷ்யஶ்ரு'ங்க³புரவராதீ⁴ஶ்வர
துங்க³ப⁴த்³ராதீரவாஸி-ஶ்ரீமத்³வித்³யாஶங்கரபாத³பத்³மாராத⁴க—
ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு–ஶ்ரீமத³பி⁴னவவித்³யாதீர்த²மஹாஸ்வாமிகு³ருகரகமலஸஞ்ஜாத
ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு ஶ்ரீபா⁴ரதீதீர்த²மஹாஸ்வாமினாம்'
தத்கரகமலஸஞ்ஜாத–ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீவிது⁴ஶேக²ரபா⁴ரதீமஹாஸ்வாமினாஞ்ச
சரணாரவிந்த³யோ: ஸாஷ்டாங்க³ப்ரணாமான் ஸமர்பயாம: ||

ஜகத்குரு சங்கராசார்யர் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ மஹாஸந்நிதானம் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ ஸந்நிதானம் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்